'வெள்ளி விழா' காணும்

## தமிழ் அவைக்காற்று கலைக் கழகத்தின்

# நாடக விழா - 2003





8th February 2003

Waltham Forest Theatre

London - E17

# WILSON
## ESTATE AGENTS LTD.

**Estate agent, care about your property needs and your property.**

**- Sales - Lettings - Mortgages - Insurance - Valuers - Commercial -**

**Sales/Mortgages**

*Houses for your choice*
*Lenders for your choice*
*Choose your type of borrowing*
*Buy to Let Mortgage available*
*Mortgages for Foreigners*

**Lettings**

*Variety of Houses for tenants*
*Excellent rates for Landlords*
*Rent guranteed*
*Excellent Maintenance*
*Free Valuation with No Obligation*

**Commercial**

*Find the right place for business*
*Business loans & Shops*

**Insurance**

*Home and Life*
*Choose the right Cover*

**383 Northolt Road**
**South Harrow**
**Middlesex HA2 8JD**
**Tel: 020 8426 7100**
**Fax: 020 8426 7500**

**52 Spring Grove**
**Hounslow**
**Middlesex TW3 4BN**
**Tel: 020 8572 7226**
**Fax: 020 8572 7228**

**Website: www.wilsonestate.co.uk**
**E-mail: info@wilsonestate.co.uk**

YOUR HOME IS AT RISK IF YOU DO NOT KEEP UP REPAYMENTS ON A MORTGAGE OR OTHER LOAN SECURED ON IT.

# கலையுலகில் எங்கள் பயணம்....

இது எமது வெள்ளிவிழா ஆண்டு. எமது வெள்ளிவிழா நிகழ்ச்சித் தொடரின் முதலாவது நிகழ்விற்கு வருகை தந்திருக்கும் அனைவருக்கும் எமது அன்பான வணக்கம்.

இந்த 25 வருட காலத்தில் எமது நாடக இயக்கத்தில் தன்னார்வத் தொண்டர்களாக நூற்றுக்கணக்கானோர் பங்கெடுத்து வந்திருக்கிறார்கள். இலங்கையில் யாழ்ப்பாணம், கொழும்பு மற்றும் பல்வேறு இடங்களிலும், தற்போது புலம்பெயர்ந்து பல்வேறு நாடுகளிலும் வாழ்கிறார்கள். நட்பு காரணமாகவும், நாடகத்தின்மீது, தமிழின்மீது உள்ள பற்றுக்காரணமாகவும், மேடையிலும், மேடையின் பின்னும் அர்ப்பணிப்புடன் பங்காற்றிய அனைத்து உள்ளங்களையும் இந்த நேரத்தில் நினைத்துப் பார்க்கிறோம்.

சாதனைகள், வெற்றிகள், சோர்வுகள், அதிருப்திகள் என்று பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு அனுபவங்களைப் பெற்றிருக்கிறோம். இன்னும் உயிர்ப்புடன் இயங்கும் சக்தியை எமக்குக் கொடுப்பவர்கள் பார்வையாளர்கள். பல்லாயிரக்கணக்கான பார்வையாளர்களைப் பலநாடுகளில் கண்டிருக்கிறோம். இவர்கள் தரும் ஆதரவும் ஊக்கமுமே, புகலிடங்களில் எவ்வளவு கஷ்டமான சூழலிலும் எம்மை இயங்க வைக்கிறது.

தமிழ் நவீன நாடகப்பரப்பில் தனிஅமைப்பாக, கூடுதலான மேடையேற்றங்களை, அதிகமான நாடுகளிலும் சென்று நிகழ்த்தியிருக்கிறோம். ஒவ்வொரு நிகழ்வும் எமக்கு தனி அனுபவம். இந்த அனுபவம்தான் எங்கள் பலம். எம்முடன் பல புதியவர்கள், இளையவர்கள் இணைகிறார்கள். புதிய நடிகர்கள், புதிய எழுத்தாளர்கள் உருவாகி வருகிறார்கள். "தமிழ் நாடகம் உலகத் தரத்துக்கு உயரவேண்டும்." என்ற எமது அவா நிறைவேறும் என்ற நம்பிக்கை வலுவடைகிறது.

இன்றைய நிகழ்ச்சியைத் தொடர்ந்து, வெள்ளிவிழா ஆண்டைப் பதிவு செய்யுமுகமாக சிறப்பு நிகழ்ச்சிகளை பல இடங்களில், நாடுகளில் நிகழ்த்தவுள்ளோம். நூல்வெளியீடு, ஒலி, ஒளிப்பேழை வெளியீடு என்ற பல திட்டங்களை வகுத்து செயற்பட்டு வருகிறோம். இவற்றிற்கு என்றும்போல், பார்வையாளர்கள், ஊடகங்கள், நலன்புரிஅமைப்புகள் ஆகியவற்றின் ஆதரவு தொடர்ந்தும் இருக்கும் என்று நம்புகிறோம்.

நன்றி - வணக்கம்.

- தமிழ் அவைக்காற்று கலைக்கழகம்.

**Tamil Performing Arts Society,**
B.M. Box. 577, London WC1N 3 XX,
Tel: 020 8422 2859

*A professional and friendly service from a firm of*
*Chartered Certified Accountants*

# VINNEY VIGNES

Chartered Certified Accountants
Registered Auduitors and Business & Taxx Advisors
Est. 12 Years

♦
**SOLE TRADERS**
♦
**SELF ASSESSMENT**
♦
**BUSINESS START-UPS**
♦
**PARTNERSHIPS**
♦
**AUDIT**
♦
**VAT**
♦
**LIMITED COMPANIES**
♦
**TAX INVESTIGATIONS**
♦
**PAYROLL / PAYE**
♦

93 At. Andrews Road, Ilford, Essex 1G1 3PE
**Tel: 020 8554 8833 Fax: 020 8554 8855**
Mobile: 07050 263 539, 07956 277 112
Eamil: vignes@vinneyvignes.co.uk
Web: www.vinneyvignes.co.uk



# அவைக்காற்றுக் கழகம்: ஓர் குறிப்பு

70களின் பிற்பகுதியிலே தோன்றிய அவைக்காற்று கழகம் இன்று இங்கிலாந்திலே முனைப்புடன் செயல்பட்டு வருகின்றது என நண்பர் சாந்தகுணம் கூறியதும் மகிழ்வுற்றேன். அந்த உந்தலிலே கடந்த காலத்தை மீட்கத் தொடங்கினேன்.

பாலேந்திரா, ஆனந்தராணி, நிர்மலா நித்தியானந்தன், போன்ற கலைஞர்களின் உற்சாகத்தினாலும், உழைப்பினாலும் தான் அவைக்காற்று கழகம் தோன்றியது. அதன் முதல் அளிக்கையாக ரென்னஸி வில்லியம்ஸின் 'கண்ணாடி வார்ப்புகள்' வீரசிங்கம் மண்டபத்தில் மேடையேறியதாக ஞாபகம். அது பரவலாக பாராட்டு பெற்றதுடன், கொழும்பிலும் பின்னர் வெற்றிகரமாக மேடையேறியது. இலங்கை வானொலியிலும் அது ஒலிபரப்பப்பட்டது. "கண்ணாடி வார்ப்புகளைத்" தொடர்ந்து, இந்திரா பார்த்தசாரதியின் "மழை" பிரக்றின் "யுகதர்மம்", லோர்காவின் "ஒரு பாலைவீடு" போன்ற நாடகங்களும் மேடையேற்றப்பட்டன.

அவைக்காற்று கலைக்கழகத்தின் செயற்பாடுகள் யாழ்ப்பாணத்திலேயே சில சர்ச்சைகளையும் கிளப்பிவிடத் தவறவில்லை. யாழ்ப்பாணத்தில் முளைவிட்ட நாடகங்களை புறக்கணித்து, அந்நிய நாடகங்களை அது மேடையேற்றி வருவதாக அதன் மீது கணை தொடுக்கப்பட்டது. கிணற்றுத் தவளைகளின் கூச்சலைப் பொருட்படுத்தாது, அவைக்காற்று கலைக்கழகம் தனது பணியைத் தொடர்ந்தது. இன்று யாழ்ப்பாணத்தில் நாடகத்துறையில் ஓர்வகை விழிப்புணர்ச்சி தோன்றியிருக்கிறதென்றால், அதற்கு வழி வகுத்தவர்களில் அவைக்காற்று கழகத்திற்கும் வரலாற்றுப் பங்குண்டு என்பதை பக்கச்சார்பற்றவர்கள் பொதுவாக ஏற்றுக் கொள்வர்.

நாடகத் துறையின் பன்மைத்தன்மைக்கு அவைக்காற்றுக்கழகம் தொடர்ந்து சளைக்காமல் பணிபுரிந்து வருவது மகிழ்ச்சிக்குரியதே.பாலேந்திராவிற்கும் அவரது சகாக்களுக்கும் எனது வாழ்த்துக்களும் நல்லாசிகளும்

**ஏ.ஜே. கனகரத்தினா**

திருநெல்வேலி - யாழ்ப்பாணம்
28.06.1998

# Srikanth & Co

SOLICITORS

# Tel: 020 8795 0648

**Fax: 020 8795 0649**
**Mobile: 07831 195 979**

**557 HIGH ROAD, WEMBLEY, MIDDLESEX HA0 2DW**

# புலம்பெயர் நாடக அரங்கு - க.பாலேந்திரா

தமிழ் அவைக்காற்றுக்கழக நாடகங்களின் அனுபவப்பின்னணி
(1998ல் சிட்னி இலக்கியப்பவர் + அரங்கக்கலைகள் என்ற அமைப்பின் ஆய்வரங்கில் வாசிக்கப்பட்ட கட்டுரையின் ஒரு பகுதி)

## தமிழ் அவைக்காற்றுக்கழக நாடகங்கள்

தமிழ் அவைக்காற்றுக்கழக அனுபவப் பின்னணயில் அதன் வளர்ச்சியையும், குறை நிறைகளையும் இக்கட்டுரை கூடுதலாக வெளிப்படுத்துகிறது. இலங்கையில் நிகழ்ந்த நாடக முயற்சிகளின் தொடர்ச்சியாகவே இம்முயற்சிகளைப் பார்க்கலாம். 1978இல் தீவிர நாடக இயக்கத்தினை இலக்காகக்கொண்டு ஆரம்பமான இலங்கை அவைக்காற்றுக் கலைக்கழகமும், இலங்கையில் நாலாண்டுகால வரலாற்றில், கடும் உழைப்பில், பல நாடகங்களை நாடெங்கிலும் 100 தடவைகளுக்குமேல் மேடையேற்றி, ஈழத்து நாடகப்போக்கினை நிர்ணயிப்பதில் மிக முக்கியமான பங்கு வகித்தது.

ஈழத்து கலாசாரத் தளம் தமிழகத்தைவிட காத்திரமானது. இலங்கையின் பொதுவான கல்வி வளர்ச்சி காரணமாகவும், ஈழத்துத் தொடர்பு சாதனங்கள் தென்னிந்தியாவைப்போல வணிகமயப்பட்ட சந்தை நோக்கை இலக்காகக்கொண்ட மலிந்த ரசனைக்கானதாக இல்லை. ஊர் நாடகங்கள், நகைச்சுவை நாடகங்கள், அதீத உணர்ச்சிப் பாங்கான நாடகங்கள், ஆங்காங்கே மேடையேறிக்கொண்டு இருந்தபோதிலும், இலங்கையின் பிரதான போக்கினை நிர்ணயிக்கும் நாடகச் செல் நெறியாக அமையவில்லை. காத்திரமான சிறந்த நாடகங்கள் மேடையேற்றப்படும் போது, மக்களின் கவனத்தை நேரடியாக ஈர்ப்பதில் தடைகள் எதுவும் இல்லை. புலம்பெயர் சூழலிலும் ஈழத்துத் தமிழர்களே பெரும்பான்மையாக லண்டனில் வசிக்கின்றனர். தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் லண்டனில் சிறுபான்மையாகவே காணப்படுகின்றனர். இருந்தபோதும், தமிழ் அவைக்காற்று கலைக்கழகம், இலங்கையில் உருவாக்கிய ரசிகப் பரம்பரையை முற்றாக இழந்த நிலையில் லண்டனில் புதிய ஆரம்பமாகவே அமைந்தது.

## லண்டனில் தமிழ் அவைக்காற்று கலைக்கழக ஆரம்பம்.

ஈழத்தில் நாடக மேடையேற்றத்தில் கொண்டிருந்த அனுபவங்களும், புலம்பெயர் மண்ணில் சந்திக்க நேர்ந்த கலைஞர்களும், ரசிகர்களும் லண்டனில் கழகத்தின் நாடக இயக்கத்திற்கு ஆதாரசக்திகளாக அமைந்தன. புதிய மண், புதிய சூழல், முற்றிலும் புதிய வாழ்க்கை முறைகள், எல்லாவற்றையும் பரீட்சார்த்தமாக முட்டி மோதி செய்து பார்த்தே கண்டறிய வேண்டிய நிலைமை. எளிதாகச் சென்றடைவதற்கு பாதைகள் எதுவும் இருக்கவில்லை.

வாழ்க்கைப் பொருளாதாரப் போராட்டம் புலம்பெயர்ந்த இடத்தில் அனைவருக்குமே பொதுவான பிரச்சனையாக அமைந்தன. அயராத உழைப்பை வேண்டி நின்ற குடும்பக்

கட்டமைப்புகள். இந்த நெருக்கடியான சூழலின் மத்தியிலும் அவர்கள் மத்தியில் சுரந்த நாடக உணர்வு, நாடக அமைப்பின் வெற்றிக்கு ஆதாரசுருதியாக அமைந்தது. நாம் பின்பற்றிச்செல்ல முன்மாதிரியான ஒரு நாடக அமைப்பு லண்டனில் நிலை கொண்டிருக்கவில்லை. சமூக உணர்வும், அரசியல் ஆர்வமும், இலக்கிய ஈடுபாடும் கொண்ட மிகுந்த குறுகிய எண்ணிக்கையினரே பரஸ்பரம் சந்தித்துக் கொண்ட சூழல். அந்நியச் சூழலில் கலந்திருந்த வெறுமையைத் துடைத்திடும் வேகத்தோடு இந்தச் சிறு குழுவினர் இணைந்து 1983-84இல் மேற்கொண்ட ஆக்கபூர்வமான முயற்சிகளே இந்நாடக இயக்கத்திற்கு பிள்ளையார் சுழி போட்டது.

புகலிடச் சூழலில் நேரம் = பணம்; என்ற வாய்ப்பாட்டில், பெரும்பான்மையோர் வாரோட்டம் நடத்திக் கொண்டிருக்கும்போது, வருவாய் இல்லாமல் நேரத்தைச் செல-வழித்து நாடகக் கலையில் ஈடுபடுவதற்கு மிகச்சிலரையே கண்டுபிடிக்க முடியும். இப்படியாக கஷ்டங்கள் மத்தியிலும் இடைவிடாது தொடர்ந்து இயங்கி தற்போது தமிழர் வாழும் நாடுகளில் பரவலாக நாடக விழாக்கள் நடாத்தி வெற்றிபெற முடிந்திருக்கிறது. இவ்வளர்ச்சியை இரண்டுவகைக் காலவரையறையில் பார்க்கமுடியும்

1. 1984 - 91 ஸ்தாபித காலம்
2. 1991 - 98 அகலித்தல் காலம்

## ஸ்தாபித காலம்

ஸ்தாபித காலத்தில் லண்டன் எல்லைக்குள், பெரும்பாலும் இலங்கையில் மேடையேற்றப்பட்ட நாடகங்களை, மீள்தயாரிப்பு செய்தும், இலங்கையில் பணியாற்றிய சில கலைஞர்களை திரும்பவும் ஒருங்கிணைத்தும் ஒரு பலமான அத்திவாரம் உருவாக்கப்பட்டது. இக்காலத்தில் மழை, பசி, யுகதர்மம், பலி, முகமில்லாத மனிதர்கள், இடைவெளி, சம்பந்தம், எரிகின்ற எங்கள் தேசம், ஆகிய தயாரிப்புகள் லண்டனில் 30 மேடையேற்றங்களைக் கண்டன. எந்தவித அரச உதவிப்பணத்தையும் பெறாமல், அரசியல் அமைப்புகள் ஆளணிகளின் ஆதரவும் இல்லாமல், முற்று முழுதாக தமிழ் மக்களுடைய ஆதரவிலேயே பொருளாதார ரீதியில் கையைச் சுட்டுக் கொள்ளாமல் இந்நாடக நிகழ்ச்சிகள் நடந்தேறின. ஒத்திகை இடவசதியின்மை, தகுந்த இசைக்கலைஞர் தட்டுப்பாடு, தேர்ந்த தமிழ் ஒலி, ஒளி அமைப்பாளர்கள் இல்லாமை, விளம்பர வசதியின்மை போன்ற பல்வேறு பிரச்சனைகள் மத்தியிலும், வளர்ந்து முற்று முழுதாக நாடக விழாக்களை நடாத்தும் அளவிற்கு இக்காலகட்டத்தில் வளர்ச்சி கண்டுள்ளது.

## அகலித்தல் காலம்

1. வருடாந்த லண்டன் நாடகவிழாக்கள்
2. தமிழர் வாழும் கீழ்காணும் ஐரோப்பிய நாடுகளில் நாடக மேடையேற்றங்கள்.
   (அ). நெதர்லாந்து 08.08.1993
   (ஆ). சுவிற்ஸலாந்து ஐந்து நாள் நாடகவிழா 02 - 10 ஏப்ரல் 94
   (சூரிச், பேர்ண், பாசல், செங்காலன்)

(இ). பிரான்ஸ் 11, 12 மார்ச் 95
(2 நாள் நாடகவிழா, பாரிஸ்)

(ஈ). நோர்வே 16, 17 ஏப்ரல் 95
(2 நாள் நாடகவிழா ஒஸ்லோ, பேர்கன்)

3. ஐரோப்பாவிற்கு வெளியே நடந்த நாடக விழாக்கள்
   (அ). கனடா 27.08.94, 24.05.94 (ரொறொன்ரோ)
   (ஆ). அவுஸ்திரேலியா மூன்றுநாள் நாடகவிழா (சிட்னி, பிறிஸ்பன், மெல்பன்)
4. கூட்டுத் தயாரிப்புகள்
   (அ). பிறென்ற் தமிழ்ச் சங்க மாணவர்களைக் கொண்டு சிறுவர் நாடகங்கள் 1991 - 98 (ஐந்து நாடகங்கள்)
   (ஆ). புறூநல் பல்கலைக்கழக மாணவர்களுடன் இணைந்து நாடகத்தயாரிப்பு - 1997
   (இ). சர்வதேச தமிழ் மாணவர் மன்றம் (லண்டன்) இணைந்த கவிதா நிகழ்வு 1997
5. நாடகப்பயிற்சிப்பட்டறை: சர்வதேச ரீதியில் அறியப்பட்ட Adam Darius அவர்களுடன் நாடகப்பயிற்சி.
6. லண்டனில் அவைக்காற்றுக் கலைகள் பற்றிய ஒருநாள் ஆய்வரங்கும், பின்வருவோருடனான கலந்துரையாடல் நிகழ்ச்சிகளும்
   சுந்தரராமசாமி, S.V. ராஜதுரை, கருஞ்சுழி ஆறுமுகம், கூத்துப்பட்டறை பசுபதி, பேராசிரியர் சிவத்தம்பி, கவிஞர் M.A. நுஹ்மான், க. வெங்கடாசலபதி, பேராசிரியர் இந்திரா பார்த்தசாரதி.

இக்காலகட்டத்தில் Voclav Havel எழுதிய பிரத்தியேகக்காட்சி, தரிசனம், Harold Pinter எழுதிய போகிற வழிக்கு ஒன்று, Samuel Becketஇன் திக்குத் தெரியாத காட்டில், ரஞ்சிதராய் சௌத்திரியின் பாரததர்மம், முருகையனின் இரு துயரங்கள், மாவை நித்தியானந்தனின் ஐயா இலெக்ஷன் கேட்கிறார், அவசரக்காரர்கள், அம்பையின் ஆற்றைக் கடத்தல்,, A.S.A.ராம் இன் எப்போ வருவாரோ ஆகிய நாடகங்களுடன் கலாநிதி மௌனகுருவின் வேடரை உச்சிய வெள்ளை புறாக்கள், தப்பி வந்த தாடி ஆடு, நம்மைப்பிடித்த பிசாசுகள், சி. சிவசேகரத்தின் மலைகளை அகற்றிய மூடக்கிழவன், அயலார் தீர்ப்பு, ஆகிய சிறுவர் நாடகங்களும், புதிதாகத் தயாரிக்கப்பட்டன. இலங்கையில் தமிழ் அவைக்காற்றுக் கலைக்கழகத்தினராலும், வேறு குழுக்களாலும் ஏற்கனவே மேடையிடப்பட்ட நாடகங்களுடன், பத்து நாடகங்கள் லண்டனில் புதிதாகத் தயாரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## லண்டனிலும் மற்றைய நாடுகளிலும் ஆதரவு

லண்டனில் பொதுவாக தமிழ் அமைப்புகள், பிரதேச வரையறைக்குள் இயங்குகின்றன. வடக்கு லண்டனில் வசிப்பவாகள், கிழக்கு லண்டனில் நிகழும் ஒரு கலை நிகழ்வுக்கு செல்வது குறைவு. வாகன போக்குவரத்து நெருக்கடி, மற்றும் செலவு காரணமாக இருக்கலாம். லண்டனில் ஒரு பிரதேச வரையறைக்குள் மட்டும் நிற்காமல் வெவ்வேறு பகுதிகளில் நாடக நிகழ்ச்சிகளை, விழாக்களை நடத்துவது பரந்துபட்ட பார்வையாளர்களை அடையும் என்ற ரீதியிலேயே தமிழ் அவைக்காற்று கலைக்கழக லண்டன் நாடகவிழாக்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இப்படி இயங்கும் தமிழ் அமைப்புகள் மிகக் குறைவு என்றே சொல்ல வேண்டும். இந்த ரீதியில் இதுவரை சுமார் எழுபது மேடையேற்றங்கள் லண்டனில், வெவ்வேறு பகுதிகளில் நடைபெற்றுள்ளன. ஆரம்பகாலத்தில் நுழைவுச் சீட்டுகளை வீடுகளுக்குக் கொண்டுசென்று விற்றால் மட்டுமே பார்வையாளர்களை நாடக நிகழ்ச்சிக்கு வரச்செய்யமுடியும் என்ற நிலையே இருந்தது. காலப்போக்கில் தமிழ் வானொலி, பத்திரிகை, தமிழ்க்கடைகள் என்று விளம்பர வசதிகளும் அதிகமாக இந்தப் பிரச்சனை ஓரளவு குறைந்தது. மண்டப வாயிலில் ஓரளவு மக்கள் தாமாகவே நுழைவுச்சீட்டுப்பெற்று நாடகம் பார்க்க வரத் தொடங்கினர். தொடர்ந்த நாடக மேடையேற்றங்களே தீவிர நாடக இயக்கத்தை வலுப்படுத்தும் என்ற ரீதியில் இடைவிடாது தொடர்ந்த முயற்சிகள் பலன்தர ஆரம்பித்தன. தற்போது கடந்த இரண்டு வருடகாலமாக, நாடக விழாக்களை வர்த்தக ஸ்தாபனங்கள் முழுமையாக Sponsor செய்ய ஆரம்பித்துள்ளன. கடந்த வருடம் பெப்ரவரி மாதம், லண்டனில் உள்ள ஆங்கில அரங்கமான Paul Robeson Theatre, தமிழ் அவைக்காற்று கலைக்கழகத்தை அழைத்து தாமாகவே ஒரு நாடக விழாவை தமிழில் நடத்தியமை, இக்கழகத்திற்கு கிடைத்த ஒரு நல்ல அங்கீகாரம் ஆகும்.

மற்றைய புலம்பெயர் நாடுகளில், பெருவாரியான மக்கள் தாமாகவே நுழைவுச்சீட்டு வாங்கி நாடகம் பார்க்க வந்தமை இங்கு குறிப்பிட வேண்டியது. கனடாவில் இரண்டு முறையும் சுமார் எண்ணூறுக்கு மேற்பட்டவர்கள் திரண்டிருந்தனர். நோர்வே நாட்டின் தலைநகர் ஒஸ்லோவில் தமிழர் தொகை குறைவாக இருந்தபோதும் சுமார் 600பேர் தாமாகவே நுழைவுச்சீட்டு வாங்கி நாடகம் பார்க்க வந்தனர். தற்போது இந்த ஆய்வரங்கினை நடத்தும் சிட்னி தமிழ் அரங்கக் கலைகள் சக இலக்கியப்பவர் சிட்னியில் தமிழ் அவைக்காற்றுக் கலைக்கழகத்தின் நாடக விழாவை நிகழ்த்தியபோது, நாடகம் ஆரம்பமாவதற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்பே பெருந்தொகையான மக்கள், மண்டப வாயிலில் திரண்டிருந்தனர். வாசல் திறந்ததும் மண்டபம் நிறைந்தது. சுவிஸ்லாந்தில் நுழைவுச்சீட்டுக்களை முதலே விற்பனை செய்திருந்தார்கள். பாரிசில் எதிர்பார்த்த அளவில் சனக்கூட்டம் திரளவில்லை. ஒவ்வொரு புலம்பெயர் நாடுகளிலும் ஈழத்தமிழரின் ரசிப்புத் தன்மை சற்று வித்தியாசமாக இருந்ததை அவதானிக்க முடிந்தது. வெவ்வேறு நாடுகளில் வேறுபட்ட வாழ்க்கை முறைகளைக் கொண்டு, வெவ்வேறு விதமான கல்வி, தொழில் பின்னணியுள்ள ஈழத்தமிழர் தொகையினரைக் காணக்கூடியதாக இருந்தது.

## சிறுவர் நாடகங்கள்

அந்நியச் சூழலில் எமது சுய அடையாளத்தை இனம் காணவும் இச்சமூகத்தில் தன்னம்பிக்கையுடன் வாழவும், பலமான ஒரு அத்திவாரத்தை எமது சிறுவர் மத்தியில் கட்டியெழுப்பவேண்டும். மரபு பேணும் முயற்சியில் பரதம், கர்நாடக சங்கீதம் ஆகியவற்றில் காணப்படும் ஆர்வம் நாடகத்துறையில் இல்லை என்பது கசப்பான உண்மை. லண்டனில் தமிழ்ச் சிறுவர்கள் மத்தியில், சிறுவர்களுக்கான நாடகத்தை அறிமுகப்படுத்தும் முயற்சிகள், அவர்களுக்கு தமிழின் பாரம்பரிய கலைமரபை எடுத்துச் சொல்வனவாகவும், ஆங்கிலச் சூழலை ஏற்படுத்துவதாகவும் அமையவேண்டும்.

இந்த வகையில் நாடகப்பயிற்சிப்பட்டறை மூலம் சிறுவர்களைப் பயிற்றுவித்து கலாநிதி சி. மௌனகுருவின் வேடனை உச்சிய வெள்ளைப் புறாக்கள் நாடகம் 1991இல் முதலில் தயாரிக்கப்பட்ட போது சிறுவர்களின் ஊக்கமும், தமிழ் உச்சரிப்பும் திருப்தி தருவதாக இருக்கவில்லை. தொடர்ந்தும் நாடகத்தை மேடையேற்றி நல்ல வரவேற்பைப் பெற்றபின்னர், அடுத்தவருடம் தப்பி வந்த தாடி ஆடு நாடகம் தயாரிக்கப்பட்டபோது கூடுதலான சிறுவர்கள் பங்குபற்றினர். அவர்களுடைய ஆக்கத்திறமைகளுக்கும் இடம்கொடுத்து, பயிற்சிப்பட்டறைகளில் அவர்களின் ஆர்வத்தைத் தூண்டும் விதமாக அரங்க விளையாட்டுகளுடன் தயாரிக்கப்பட்ட போது மிகவும் நல்ல வரவேற்பு சிறுவர்களிடத்தும் கிடைத்தது. இதனைத் தொடர்ந்து, நம்மைப் பிடித்த பிசாசுகள் நாடகத்தில் சில காட்சிகளை சிறுவர்களையே உருவாக்கும்படி கேட்டு, அக்காட்சிகள் இறுதி நாடகத்திலும் அங்கமாக்கப்பட்டது. இது ஒரு நல்ல உத்தியாக்கப்பட்டது. பேராசிரியர் சிவசேகரம் அவர்கள் எழுதிய மலைகளை அகற்றிய மூடக்கிழவன் நாடகத்தில் 25க்கும் மேற்பட்ட சிறுவர்கள் அழகு தமிழில் பேசி நடித்தனர். இந்நாடகத்தில் நாட்டார் இசை, கூத்து ஆகியன கையாளப்பட்டன. சிறுவர்களின் சுத்தமான தமிழ் உச்சரிப்புக் குறித்தும் அரங்க இசை உறவு குறித்தும் மூத்த தமிழ் அறிஞர் சோ. சிவபாதசுந்தரம் சன்றைஸ் தமிழ் வானொலி விமர்சனத்தில் விதந்து குறிப்பிட்டுள்ளார். 36 சிறுவர்களுடன், நம்மவர் பிரச்சினையில் அந்நியரைப் புகவிட்டால் விளையும் விபரீதத்தை, இரு பூனைகளின் அப்பத்தை ஒரு குரங்குபங்கிட முற்பட்டு தானே உண்டுவிட்ட கதையை வைத்து அயலார் தீர்ப்பு என்ற நாடகம், 1997ல் மேடையேறியுள்ளது. இச்சிறுவர் நாடகங்கள் பல தடவைகள் லண்டனில் மேடையேற்றம் கண்டபோதும் மீண்டும் மீண்டும் நல்ல வரவேற்பைப் பெறுகின்றன.

தமிழ் அவைக்காற்றுக் கலைக்கழகம், அதன் குறுகிய புகலிட வாழ்வில் மேற்கொண்ட நாடக முயற்சிகள் பற்றிய தன்னில் சார்ந்த ஒரு விபரணக் குறிப்பு இது. எமது ஆற்றல்களின், ஆளுமைகளின் வரையறுக்கப்பட்ட எல்லைக்குள், அந்நியச் சூழலில் நாம் மேற்கொள்ள முடிந்த நாடக முயற்சிகள் இவை. நாடக அரங்கினை இன்னும் செழுமையான கட்டங்களுக்கு எடுத்துச்செல்ல இன்னும் ஆழ்ந்த செய்கைகளும் கடினமான உழைப்பும் பரந்த ஆதரவும் பெருமளவில் தேவையாகி நிற்கிறது.

# Robert Terry & Co

## ESTATE AGENTS

*SALES, LETTING COMMERCIAL, MORTGAGES, MANAGEMENT COMMERCIAL, LEASING BUSINESS TRANSFERS LIFE ASSURANCES*

21 Masons Avenue, Wealdstone, Harrow, Middlesex HA3 5AH

**Tel: 020 8863 6666 Fax: 020 8863 6665**

**www.robert-terry.co.uk**

Your home is at risk if you do not keep up repayments on a mortgage or other loan secured on it.

---

## Mortgage Solutions
LONDON LTD

Mortgages for First time buyers

Home movers Buy to let

Investment Mortgages

Commercial Mortgages

Commercial Loans and Business Transfer loans

**398-400**
**Rayners Lane**
**Harrow, Middlesex**
**HA5 5DY**

Telephone:
**020 8429 4000**

Fax:
**020 8429 0550**

Your home is at risk if you do not keep up repayments on a mortgage or other loan secured on it.

## இவர்கள் பார்வையில்

### Rich in talent

The "avant garde" Tamil theatre movement which saw birth in Jaffna, but found expression in Colombo in the mid- 70s has now come of age, interestingly enough, in the Tamil expatriate world of the West!

Although there were a few other talented pioneer producers too on the Colombo stage, the credit for sustaining the modern stage tradition, and carrying it from East to West and from country to country goes to K. Balendra and the Tamil Performing Arts Society.

The Tamil Performing Arts Society in rich in talent: an imaginative director / producer in Balendra and a versatile and gifted actress in Anandarani backed by a team of players like Krishnarajah and Dharshini Ganeshapillai.
***S. Sivanayagam (HOTSPRING - December 98)***

### A brilliant play

The social realism in "Kannaadi Vaarpugal" is remarkable..... This is the common scenario in most Srilankan Tamil homes in the U.K. and this play is therefore a useful contribution to understand current social reality and to promote debate. . .

A brilliant play well acted by all, the quality of which is rarely seen in Tamil drama.
***M. Sooriasegaram (Tamil Times October 99 )***

### அலாதி

கண்ணாடி வார்ப்புகள் நாடகத்தில் ஒளியூட்டப்பட்ட மேடை அலங்காரம் கண்ணைக்கவர, நாங்களும் அவர்கள் வீட்டுத் தாள்வாரத்தில் நிற்பதுபோல் ஒரு உணர்வு. தாயாக ஆனந்தராணி கதையை தன்வசப்படுத்தி, இழுத்துச் செல்லும் பாங்கே அலாதிதான். நாடகம் நிறைவுபெற ஒளியமைப்பு, காட்சியலங்காரம், பாத்திரங்களுடன் இரண்டறக் கலந்த ரசிகர்கள் மெய்மறந்து சில நிமிடங்கள். சுதாகரித்துக்கொண்டு கரஒலி எழுப்பி அங்கீகாரமும் அளிக்கிறார்கள்.
**யோகராஜா மாஸ்ரர் (புதினம் - 10.99)**



# ஈழவர் திரைக்கலை மன்றம்

## தரணியில் தமிழர் வாழும் பிரதேசங்களில்

## கிளைகள் திறந்து.....

**குறுந்திரைப்படங்கள் தயாரிக்கும் பணியில் மும்முரமாக ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது எமது மன்றம்..**

இத்தயாரிப்பிற்காக எம்மவரிடமிருந்து

## சிறந்த கதை

## தொழில்நுட்பம்

## இசை

என்பன எதிர்பார்க்கப்படுகிறது...........

**கலையார்வமும், திறமையும் உள்ளவர்களோடு கூடிப்பணிபுரிய விரும்புகிறோம்.**

ஆக்கம் தர விரும்புவர்களும், ஆர்வமுள்ளவர்களும்

**தொடர்பு கொள்ளவும்**

## அமலன்

**ஈழவர் திரைக்கலை மன்றம்**

54 Russell Road, Walthamstow, London E17 6QY.

& Co M

# Markandan & Co

**Solicitors & Administrators of Oaths**

***Immigration / Home Office***
***Refugee - Asylum***
***Commercial Conveyancing***
***Family Law - Private Client only***
***Licensing***
***House / Flat Purchase or Sale Etc***

**M. Markandan** LL.B
**S. Sriskandarajah** LL.M (Lond.)

Community Legal Service
Specialist Help Point Immigration

**THAMIL HOUSE**
720 Romford Road
Manor Park, London E12 6BT
Tel: 020 8514 8288
Fax: 020 8514 8303
Email: mm@markandan-solicitors.co.uk
DX 4715 East Ham

# CAPITAL AUTOS LTD.

***ACCIDENT REPAIR SPECIALISTS***

*also*
*General Servicing & Repairs to all Makes & Models*

## - BMW - MERCEDES -

- Ford - Vauxhall - Honda & Nissan -



*Pre-M.O.T. Testing while you wait*

51A Milton Avenue,
East Ham, London E6 1BG

**Tel: 020 8470 4789**

Fax: 020 8472 2147 www.capitalautos.com

# காத்திருப்பு

இந்த நாடகம் 1987 ஒக்டோபர் மாதம் இந்தியப்படையுடனான யுத்த ஆரம்பகாலத்தில் நடைபெற்ற சம்பவங்களால் பாதிக்கப்பட்ட ஒரு குடும்பத்தின் நிகழ்வுகளை வைத்து எழுதப்பட்டது.

**மரணம் - மிகவும் கொடியது: அதைவிட மிகவும் கொடியது - காணாமல் போவது**

இலங்கை சுதந்திரம் பெற்றதில் இருந்து காணாமல் போனவர்களின் தொகை ஒரு லட்சத்தை தாண்டிவிட்டது.

1977ல் தென்னிலங்கையில் உக்கிரம் அடைந்த இந்தக் காணாமல் போதல் என்கிற கொடுமை இன்று இலங்கைத்தேசம் மட்டுமன்றி சர்வதேசம் எங்குமே வியாபித்து நிற்கிறது. காணாமல் போதலின் வேதனையால் மிகமோசமாகப் பாதிக்கப்படுவது தாய்மையே

பிரதியாக்கம்: **ச. வாசுதேவன்**

நெறியாள்கை: **க. பாலேந்திரா**

மேடை நிர்வாகம்: **சி. சாந்தகுணம்**

ஒலி, நிர்வாகம்: **பா. சத்தியேந்திரன்**

**மேடையில்:**

திலகம்: **ஆனந்தராணி பாலேந்திரா**

மணியம்: **க. கிருஷ்ணராஜா**

நந்தன்: **ச. வாசுதேவன்**

அதிகாரி: **சி. சிவசுதன்**

பொறுப்பதிகாரி: **ச. சஞ்சீவ்ராஜ்**



**தாயகத்தில் காணாமற்போன இளைஞனின் தாயின் ஏக்கத்தை சித்தரிக்கும் நாடகம் - காத்திருப்பு -**

# கண்ணாடி வார்ப்புகள்

அகில உலக அரங்கில், இந்த நூற்றாண்டின் மிகச்சிறந்த நாடகங்களில் ஒன்று எனப் புகழப்படும் இந்த நாடகம் எம்மால் 1978ல் முதலில் தயாரிக்கப்பட்டபோது பெரும் வரவேற்பைப் பெற்றது. இலங்கையில் பல பாகங்களிலும் மேடையேற்றப்பட்டது. இலங்கை வானொலி, தொலைக்காட்சி ஆகியவற்றில் பலதடவை இடம்பெற்று பல்லாயிரக்கணக்கான ரசிகர்களின் நெஞ்சில் இன்றும் நிலைத்து நிற்கும் நாடகம் இது.

ஒளிவு மறைவின்றி தனது சொந்த வாழ்க்கையின் நிராசைகளை நாடகமாக்கியுள்ளார் நாடகாசிரியர். இந்த நாடகத்தில் நான்கேநான்கு பாத்திரங்கள்தான். இது ஒரு நினைவு நாடகம்.





**மேடையில்:**

தாய்: **ஆனந்தராணி பாலேந்திரா**

மகள்: **தர்சினி கணேசபிள்ளை**

மகன் ஜெகன்: **ச. வாசுதேவன்**

விருந்தாளி ரமேஷ்: **வி. சிவசுதன்**

**மேடையின் பின்:**

**மேடையமைப்பு: க. கிருஷ்ணராஜா**

ஒலி, இசை நிர்வாகம்:

**சி. சாந்தகுணம்**

மேடைநிர்வாகம்: **சூரியகுமார், ச. சஞ்சீவ்ராஜ், சரிதா, மானசி**

மூலம்: **டென்னஸி வில்லியம்ஸ்**

பிரதியாக்கம்:

**நிர்மலா, பாலேந்திரா, மல்லிகா,**

ஒளியமைப்பு, நெறியாள்கை:

**க. பாலேந்திரா**

# வேருக்குள் பெய்யும் மழை

காலகாலமாக நம் கண்முன்னே பெய்கின்ற இந்த வேருக்குள் பெய்யும் மழையை நகைச்சுவை உணர்வுடன் நாடகமாக்கி இருக்கிறார் செழியன். ஒரு தனிநபர் தனது தேவைக்காக இன்னுமொரு தனிநபரின் மனதை மிக நாசூக்காக பேசி மாற்றுவது நாம் அன்றாடம் காணும் ஒன்று. இது ஒரு தனிநபருடன் நின்றுவிடவில்லை. குடும்பம், சமூகம், என்று வியாபித்து சர்வதேசம் வரை பரந்து நிற்கிறது. வல்லரசு நாடுகள் தமது உளவுத்துறையின் உதவியுடன், தமது நலன்களைக் காக்க ஒரு சிறு சலசலப்பை, தமது திறமையைப் பயன்படுத்தி, அதைப் பூதாகரமாக்கி பின்னர் அந்த இடத்தையே தரைமட்டம் ஆக்குவதை நாம் கண்டுகொண்டே இருக்கிறோம். வியட்நாம், ஈராக், யூக்கோசோலாவாக்கியா, ஆப்கானிஸ்தான்..........



பிரதியாக்கம்: **செழியன்** (கனடா)

நெறியாள்கை: **க. பாலேந்திரா**

**மேடையில்**

நரேந்திரன்: **ச. வாசுதேவன்**

ராதா: **ஆனந்தராணி பாலேந்திரா**

பார்த்திபன்: **பா.சத்தியேந்திரன்**

அயல்வீட்டு பெண்: **சரிதாஅண்ணாதுரை**

**இலைகளில் ஒரு துளி நீரும் இல்லை**
**மலர்களும் கிளைகளும் கூட**
**நனைந்ததான - சுவடுகள் எதுவுமில்லை**
**இது**
**வேருக்குள் மட்டும் பெய்கின்ற மழை**

**நிகழ்ச்சித் தொகுப்பு: எஸ்.கே. ராஜன்**

TIME Travel & TOURS

நம்பகமான சேவை – மலிவு விலை பயணச் சீட்டுக்கள்

**Sri Lankan Airlineஇன் முதன்மை பிரதிநிதி**
**முன்னணி Airlineஇனரின் பிரதிநிதிகள்**

கொழும்பு, சென்னை, சிங்கப்பூர், கோலாலம்பூர், சிட்னி,
ரொரன்றோ எங்கு பறப்பதற்கும் லண்டன் மாநகரிலேயே
நியாயமான குறைந்த விலையில்
பயணச்சீட்டுக்கள்
கிடைக்கும் ஒரே ஒரு தமிழர் ஸ்தாபனம்

SriLankan IATA ATOL PROTECTED ABTA

**ஒரு தொலைபேசி அழைப்பில் நீங்களே அறிந்து கொள்ளலாம்**
**அழையுங்கள்**

# 020 8907 6969

## TIME TRAVEL & TOURS LTD.

**136 Kenton Road, Harrow, Middx HA3 8AZ**

**Fax: 020 8907 8383 Email: info@ucanfly.co.uk**

**432 Alexandra Ave, Rayners Lane, Harrow, Middx HA2 9TW**

**Tel: 020 8429 8333 Fax: 020 8429 3444**

உங்களுக்கு அன்றாடம் தேவையான லீலா தயாரிப்புகளை
மொத்த விற்பனை விலைக்கு தொகையாக வாங்கிச்
சிக்கனமடையுங்கள்

KUMARANS

# KUMARANS LIMITED

**IMPORTS & EXPORTS, NEWS AGENT, OFF LICENCE & GROCERY**

142 Hoe Street, Walthamstow, London E17 4QR
Tel: 020 8521 4955, 8530 3033 Fax: 020 8530 5655
Website: www.kumarans.uk.com E-mail:
mages@kumarans.uk.com

லீலா தயாரிப்புகளின்
ஏக விநியோகஸ்தர்கள்

மங்கையர் மனம் மகிழ,
ஆடவர்கள் அதிசயிக்க,
பெண்களெல்லாம் பெருமை கொள்ள,
குழந்தைகளும் குதூகலிக்க

Jewellers & Gem Merchants

# Western Jewellers



**பொன்னுருக்கல் வேலைகளும் பக்குவமாய் செய்யுமிடம்**
**எங்கள் நகைக்கூடமன்றோ...**

# வெஸ்டன் ஜுவலர்ஸ்

230 Upper Tooting Road, London SW17 7EW

**Tel: 020 8767 3445**

Fax: 020 8767 3753

Opening Hours: Mon-Sat 10am 6.30pm Sun 11am - 5.30pm

# இன்றைய நாடக விழாவில் பங்குபற்றும் கலைஞர்கள் பற்றி

## க. பாலேந்திரா



தமிழ் அவைக்காற்று கலைக்கழக ஸ்தாபகர். 1973இல் மொறட்டுவ பல்கலைக்கழக தமிழ்ச்சங்கத் தயாரிப்பான 'ஏணிப்படிகள்' நாடகம் மூலம் தீவிரநாடக உலகுக்குள் பிரவேசித்தவர். கடந்த 30 ஆண்டுகளாக தொடர்ந்து நாடகப்பணியில் ஈடுபட்டு வருகிறார். தமிழ் அவைக்காற்று கலைக்கழகத்தின் நாடகத் தயாரிப்புகளில் ஆரம்பகால இரு நாடகங்களைத் தவிர ஏனைய அனைத்து நாடகங்களையும் நெறிப்படுத்தியவர். இவர் நெறிப்படுத்திய 40க்கும் மேற்பட்ட அதிகமான நாடகங்களில் பெரும்பாலானவை தமிழிலேயே எழுதப்பட்டவை.

பல்வேறு நாடுகளில் இருந்தும், பல மொழிகளில் இருந்தும், பல்வேறுபட்ட நல்ல நாடகங்களை தமிழுக்குக் கொண்டு வருவதற்கு காரணமாக இருந்து வருபவர். நாடகங்கள் திரும்பத் திரும்ப மேடையேற்றப்படவேண்டும் என்ற கருத்தில் ஆழ்ந்த நம்பிக்கையுடன் ஆரம்ப காலத்தில் இருந்து உழைத்து வருபவர். லண்டனில் பொறியியலாளராக பணிபுரிந்து வருகிறார்.

## ஆனந்தராணி பாலேந்திரா




கலை உலகில் இவரது பங்களிப்பு பல்வேறுபட்டது. மேடைநாடகம், நடனம், வானொலி, ஈழத்து சினிமா (கோமாளிகள், வாடைக்காற்று), தொலைக்காட்சி, நிகழ்ச்சித்தொகுப்பு என பலதுறைகளில் பிரகாசிப்பவர். சுமார் மூன்று தசாப்தகாலமாக கலைத்துறையில் பணியாற்றிவரும் இவரது தீவிர மேடைநாடகப்பணி 1975ல் ஆரம்பமாகி இன்றுவரை தொடர்கிறது.

'பிச்சை வேண்டாம்', 'மழை', நட்சத்திரவாசி, பசி, முகமில்லாத மனிதர்கள், அரையும் குறையும், ஒருபாலைவீடு, கண்ணாடிவார்ப்புகள், துக்ளக், பிரத்தியேகக்காட்சி, எரிகின்ற எங்கள் தேசம், ஆற்றைக்கடத்தல், தனி நடிப்பு பெயர்வு, காத்திருப்பு, சம்பந்தம், பாரததர்மம் போன்ற பல நாடகங்களில் தனது நடிப்பாற்றலை வெளிப்படுத்தியவர். தமிழ் அவைக்காற்றுக் கலைக்கழக ஸ்தாபக உறுப்பினர்களில் ஒருவர்.

வழுவூர் பாணியில் பரதநாட்டியம் பயின்று 1973ல் கொழும்பில் அரங்கேற்றம் செய்த இவர், இலங்கையிலும், லண்டனிலும் நடன ஆசிரியராக பலகாலம் பணியாற்றியவர். தமிழ் அவைக்காற்று கலைக்கழகத்தின் சிறுவர் நாடகங்களில் நடன அமைப்பாளராகவும், உதவி நெறியாளராகவும் பணியாற்றியவர். லண்டனில் அரச நிர்வாகசேவையில் பணியாற்றி வருகிறார்.

## க. கிருஷ்ணராஜா



ஓவியம், மேடையமைப்பு, ஒப்பனை, உடைவண்ணம், இசையமைப்பு, பாட்டு. நடிப்பு, என்று பல்வேறு துறைகளில் திறமையைக் காட்டும் ஆற்றல் மிகுந்த கலைஞர். இலங்கையில், யாழ்ப்பாணத்தில் 1979-80 காலப்பகுதியில் தமிழ் அவைக்காற்று கலைக்கழகத்தில் இணைந்து 'யுகதர்மம்', 'அதிமானுடன்', 'மழை', 'ஒருபாலை வீடு' ஆகிய நாடகங்களுக்கு மேடையின் பின்னும் 'இடைவெளி' நாடகத்தில் மேடையில் நடித்தும் பங்காற்றியவர். பாரீஸ் புலப்பெயர்விற்குப் பின்னர் 1988ல் 'யுகதர்மம்' நாடகத்தின்மூலம் லண்டனில் தமிழ் அவைக்காற்று கலைக்கழகத்தில் மீண்டும் இணைந்து, முன்னணி நடிகராக 'மழை', 'எரிகின்ற எங்கள் தேசம்', 'முகமில்லாத மனிதர்கள்', 'பிரத்தியேகக்காட்சி', 'தரிசனம்', 'பெயர்வு', பார்வைக்கோளாறு (தனிநடிப்பு), காத்திருப்பு போன்ற, நாடகங்களில் நடித்துள்ளார். எரிகின்ற எங்கள் தேசம் நிகழ்வில் இவரது ஓவியங்கள் முக்கிய பங்கு வகித்தன. சிறுவர் நாடகங்களில் பாடகராகவும், இசையமைப்பிலும் பங்குபற்றியதுடன் லண்டன் தயாரிப்புகள் அனைத்திலும் மேடையமைப்பு, உடைவண்ணம், ஒப்பனைக் கலைஞராக பணிபுரிபவர். கொழும்பு பல்கலைக்கழக நுண்கலைப் பட்டதாரியான இவரது ஓவியக் கண்காட்சி ஒன்றை தமிழ் அவைக்காற்று கலைக்கழகம் 1991இல் நடாத்தியது.

## சி. சாந்தகுணம்



1986ல் இருந்து தமிழ் அவைக்காற்று கலைக்கழகத்துடன் தன்னை இணைத்துக்கொண்டவர். 'கவிதாநிகழ்வு', 'சம்பந்தம்', 'எரிகின்ற எங்கள் தேசம்', 'யுகதர்மம்', 'ஐயா இலெக்ஷன் கேக்கிறார்', 'பாரததர்மம்', 'முகமில்லாத மனிதர்கள், 'துன்பக்கேணியிலே' 'பெயர்வு' ஆகிய நாடகங்களில் சிறப்பாக நடித்துள்ளார். இசையமைப்பாளராகவும், பாடகராகவும், மேடையின் பின் ஒப்பனை, ஒலி, நிர்வாகம், ஆகியவற்றிலும் பங்காற்றி வருகிறார். தமிழ்அவைக் காற்று கலைக்கழகத்தின் நிர்வாகத்திலும் பொதுசனத் தொடர்புத் துறையிலும் பங்களிக்கும் இவர், தற்போது புகைப்படக் கலைஞராக பணிபுரிகிறார்.

## பா. சத்தியேந்திரன்



1986 காலப்பகுதியில் தமிழ் அவைக்காற்று கலைக்கழகத்தை லண்டனில் ஸ்திரப்படுத்தவதற்கு முன்னின்று உழைத்தவர்களில் ஒருவர். 1985-90 காலப்பகுதியில் 'கவிதா நிகழ்வு', 'எரிகின்ற எங்கள் தேசம்' 'யுகதர்மம்' 'பசி' ஆகியவற்றில் தனது நடிப்புத் திறமையை வெளிப்படுத்தியவர். தற்போது லண்டனில் தாளவாத்தியக் கலைஞராக இசைக்குழு ஒன்றில் அங்கம் வகிக்கும் இவர், வேருக்குள் பெய்யும் மழை' நாடகம் மூலம் மீண்டும் நாடக இயக்கத்தில் தன்னை இணைத்துள்ளார். கணனி வடிவமைப்பாளராக (Programmer) பணியாற்றி வருகிறார்.

## ச. வாசுதேவன்



சுமார் 10 வருடங்களாக தமிழ் அவைக்காற்று கலைக்கழக நாடகங்களில் சிறப்பாக தனது நடிப்பாற்றலை வெளிப்படுத்தி வரும் முன்னணி நடிகர். 'முகமில்லாத மனிதர்கள்', 'போகிற வழிக்கு ஒன்று', 'மழை', 'அவசரக்காரர்கள்', 'பெயர்வு', 'கண்ணாடி வார்ப்புகள்', காத்திருப்பு, 'யுகதர்மம்', 'வேருக்குள் பெய்யும் மழை', போன்ற நாடகங்களில் நடித்துள்ளார். நடிப்புத்துறையில் இருந்து தற்போது 'காத்திருப்பு' நாடகம்மூலம் எழுத்துத் துறையில் பிரவேசித்துள்ளார். இவர் கடந்த சில வருடங்களாக ஒலிபரப்புத் துறையிலும் பங்காற்றி வருகிறார். பத்திரிகைத் துறையிலும் ஆர்வமுள்ளவர். தற்போது லண்டனில் தயாராகும் 'மாற்று' தமிழ்த் திரைப்படத்திலும் நடித்துவரும் இவர், லண்டனில் கணனிப் பொறியியலாளராகப் பணியாற்றி வருகிறார்.

## சஞ்சீவ்ராஜ்



சுமார் 10 வருடங்களாக தமிழ் அவைக்காற்று கலைக்கழக நடவடிக்கைகளில் அக்கறையுடன் பங்கேற்று வருபவர். 'ஐயா இலெக்ஷன் கேட்கிறார்', 'எரிகின்ற எங்கள் தேசம்', 'காத்திருப்பு' ஆகிய நாடகங்களில் நடித்திருக்கிறார். கழகத்தின் நிர்வாகம் மற்றும் பொதுஜன தொடர்புத்துறையில் உழைத்து வருகிறார்.

## வி. சிவசுதன்



கடந்த 5 வருடங்களாக தமிழ் அவைக்காற்று கலைக்கழக நடவடிக்கைகளில் ஆர்வம் காட்டி உழைத்து வருபவர். 'கண்ணாடி வார்ப்புகள்' நாடகம் மூலம் நடிகராக தனது நடிப்பாற்றலை வெளிப்படுத்தியவர். 'காத்திருப்பு' நாடகத்திலும் பங்கேற்கிறார். மேடையின் பின் ஒலி, ஒளி, தொழில்நுட்பத் துறையிலும் மற்றும் கழகத்தின் கணனிப்பக்கத்தின் (Website) உருவாக்கத்திலும் உழைத்து வருகிறார். இவர் கல்லூரி ஒன்றில் கணனிப் பொறியியலாளராகப் பணியாற்றி வருகிறார்.

## தர்ஷினி கணேசபிள்ளை



'கானக்குயில்' ஆக லண்டன் கலைப்பரப்பில் நன்கு அறியப்பட்ட இவர், மெல்லிசைத்துறையுடன் மேடை நாடகம், ஒலிபரப்பு போன்ற துறைகளிலும் ஆர்வம் காட்டி வருபவர். கடந்த 5 வருடங்களாக தமிழ் அவைக்காற்று கலைக்கழகத்தில் இணைந்து 'பெயர்வு', 'கண்ணாடி வார்ப்புகள்', 'யுகதர்மம்', போன்றநாடகங்களில் தனது நடிப்புத் திறமையை சிறப்பாக வெளிப்படுத்தி வருபவர். மருத்துவ விஞ்ஞானத்துறையில் Bath பல்கலைக்கழகத்தின் கலாநிதிப்பட்டம் பெற்ற இவர், அத்துறையில் தற்போது ஆராய்ச்சியாளாராக தொழில்புரிந்து வருகிறார்.

## சரிதா அண்ணாத்துரை



சிறுமியாக தமிழ் அவைக்காற்று கலைக்கழகத்தின் சிறுவர் நாடகங்களான 'மலைகளை அகற்றிய மூடக்கிழவன்', 'அயலார் தீர்ப்பு', ஆகிய நாடகங்களில் முக்கிய பாத்திரமேற்று நடித்தவர். 'வேருக்குள் பெய்யும் மழை' நாடகம் மூலம் கலைப்பயணத்தைத் தொடர்கிறார். Westminster பல்கலைக்கழகத்தில் கல்வி பயில்கிறார்.

# கண்மணி ஜுவலரி

**225 The Broadway Southall, Middlx, UB1 1ND**



*The timeless beauty of ever lasting love brought to life*

# Kanmany Jewellery

Tel: 020 8571 3443, 020 8574 5495

# Jeya & Co

SOLICITORS

Commissioners of Oaths

**322 High Street North, Manor Park, London E12 6SA**

**DX: 4733 EAST HAM**

**Tel: 020 - 8552 1999 Fax: 020 - 8552 9933**

- Immigration
  [We do Legal Aid]
- Conveyancing: Residential & Commercial
- Liquor Licencing

*Community Legal Service*

A QUALITY SERVICE

*Approved by The Legal services commission*

**Partners:**

**Malathy Jeyanantham LL.B - Kavina Ponnampalam LL.B - Sonia Hunjan LL.B**

Trainee Solicitor: Mathura Paramjorthy LL.B

Contact us for prompt and proper services

# எமது புகலிட நாடக நிகழ்வுகள்

| | | |
|---|---|---|
| 09.11.85 | அன்சன் மண்டபம், Willesden | மழை, பார்வையாளர்கள் |
| 15.03.86 | அக்ரன் நகர மண்டபம் | மழை, பார்வையாளர்கள் |
| 02.04.86 | Longstone School Hall<br>பிறென்ற் தமிழ்ச் சங்கம் | மழை, பார்வையாளர்கள் |
| 12.04.86 | Merton Civic Hall, Wimbledon | மழை, பார்வையாளர்கள் |
| 22.04.86 | Conway Hall | பார்வையாளர்கள் |
| 08.05.86 | Bhavan Centre | பார்வையாளர்கள் |
| 30.08.86 | அன்சன் மண்டபம், Willesden | பசி, கவிதா நிகழ்வு |
| 02.10.86 | Brentfield School, பிறென்ற் தமிழ்ச்சங்கம் பசி | |
| 10.01.87 | Acton Town Hall | கவிதா நிகழ்வு, கானசாகரம் |
| 25.04.87 | Aloerton Community School | கவிதாநிகழ்வு |
| 13.05.87 | Bhavan Centre | எரிகின்ற எங்கள் தேசம் |
| 20.06.87 | Swiss Cottage | கவிதா நிகழ்வு |
| 01.10.88 | Bhavan Centre | யுகதர்மம், சம்பந்தம் |
| 26.11.88 | Acton Town Hall | யுகதர்மம், சம்பந்தம் |
| 14.01.89 | East Ham Town Hall | யுகதர்மம், சம்பந்தம் |
| 25.11.89 | Copland Community School, Wembley | முகமில்லாத மனிதர்கள் |
| 02.12.89 | Tooting | முகமில்லாத மனிதர்கள் |
| 03.12.89 | Waltham Forest Theatre | முகமில்லாத மனிதர்கள் |
| 09.12.89 | Wimbledon | முகமில்லாத மனிதர்கள் |
| 06.01.90 | Langdon Schoool, East Ham | முகமில்லாத மனிதர்கள் |
| 13.01.90 | Goldsmith College, Lewishiam | முகமில்லாத மனிதர்கள் |
| 25.03.90 | Willesdin Library, Tooting | யுகதர்மம், பலி |
| 09.06.90 | யாழ். இந்துக் கல்லூரி நூற்றாண்டு வைபவம் | இடைவெளி |
| 04.08.90 | Camdon Town Hall | எரிகின்ற எங்கள் தேசம் |
| 09.09.90 | Willesden Library Centre | எரிகின்ற எங்கள் தேசம் |
| 27.10.90 | Neasdon | எரிகின்ற எங்கள் தேசம் |
| 08.12.90 | Goldsmith College, Lewisham | எரிகின்ற எங்கள் தேசம், சம்பந்தம் |
| 20.04.91 | Alperton Community School | எரிகின்ற எங்கள் தேசம்,<br>வேடரை உச்சிய வெள்ளைப் புறாக்கள் |
| 12.05.91 | Chingford Town Hall<br>Tamil Information Centre | எரிகின்ற எங்கள் தேசம்,<br>வேடரை உச்சிய வெள்ளைப் புறாக்கள் |
| 22.06.91 | Waltham Forest Theatre நாடகவிழா | எரிகின்ற எங்கள் தேசம், பாரததர்மம்,<br>வேடரை உச்சிய வெள்ளைப் புறாக்கள், சம்பந்தம். |
| 21.07.91 | Willesdon Library Centre | மன்னிக்கவும், பிரத்தியேகக்காட்சி, தரிசனம் |
| 19.10.91 | Alperton Community School | சம்பந்தம் |
| 02.11.91 | Alperton Community School | பாரததர்மம் |
| 16.11.91 | Waltham Forest Theatre | மன்னிக்கவும், கானசாகரம். |
| 28.12.91 | Wimbledon | சம்பந்தம் |
| 21.02.92 | Camdon Town Hall | எரிகின்ற எங்கள் தேசம் |
| 21.03.92 | Waltham Forest Theatre | சம்பந்தம், பாரததர்மம் |
| 25.04.92 | Alperton Community School | தப்பி வந்த தாடி ஆடு |
| 24.05.92 | Merton Hall<br>விம்பிள்டன் | எரிகின்ற எங்கள் தேசம், தப்பிவந்த தாடி ஆடு<br>பிரத்தியேகக்காட்சி, தரிசனம் |
| 19.07.92 | நாடகவிழா Walthamstow,<br>Lloyds Park தியேட்டர் | தப்பிவந்த தாடி ஆடு, இடைவெளி, மழை<br>துன்பக்கேணியிலே |

| | | |
|---|---|---|
| 24.05.92 | Merton Hall | எரிகின்ற எங்கள் தேசம், தப்பிவந்த தாடி ஆடு |
| | விம்பிள்டன் | பிரத்தியேகக்காட்சி, தரிசனம் |
| 19.07.92 | நாடகவிழா Walthamstow, | தப்பிவந்த தாடி ஆடு, இடைவெளி, மழை |
| | Lloyds Park தியேட்டர் | துன்பக்கேணியிலே |
| 20,27.06.93 | St. Pauls Church hall | Adam Sarius |
| | East Ham | நாடகப்பட்டறை |
| 19.06.93 | நாடகவிழா | பாரத தர்மம் |
| | South Norwood Centre | நம்மைப்பிடித்த பிசாசுகள், மழை |
| 04.09.93 | நாடகவிழா, Walthamstow | திக்குத் தெரியாத காட்டில், இரு துயரங்கள் |
| | Lloyds Park தியேட்டர் | பசி, துன்பக் கேணியிலே |
| 08.08.93 | Holland | மழை, எரிகின்ற எங்கள் தேசம் |
| 25.09.94 | இலக்கியச் சந்திப்பு | நம்மைப்பிடித்த பிசாசுகள் |
| | Conway Hall, Camden | கானசாகரம், போகிற வழிக்கு ஒன்று |
| 02.04.94 | நாடகவிழா | மழை, பசி |
| | Hotel Limmot, Zurich, Switzerland | பாரததர்மம், இருதுயரங்கள், சம்பந்தம் |
| 03.04.94 | நாடகவிழா | மன்னிக்கவும், சம்பந்தம், கானசாகரம் |
| | Stadt Casino,Basel, Switzerland | போகிறவழிக்கு ஒன்று, பாரததர்மம் |
| 04.04.94 | நாடகவிழா | எரிகின்ற எங்கள் தேசம், போகிற வழிக்கு ஒன்று |
| | Maooamondo, Bern, Switzerland | மழை, ஐயா இலெக்ஷன் கேட்கிறார் |
| 08.04.94 | நாடகவிழா | மன்னிக்கவும், ஐயா இலெக்ஷன் கேட்கிறார் |
| | Volkshous, Zurich, Switzerland | போகிற வழிக்கு ஒன்று, கானசாகரம். |
| 09.04.94 | நாடகவிழா | பசி, மன்னிக்கவும், எரிகின்ற எங்கள் தேசம் |
| | Hotel Ekkehard, St.Gallen, Switzerland | சம்பந்தம், இரு துயரங்கள் |
| 28.05.94 | நாடகவிழா | மன்னிக்கவும், காளி எழுந்தாள் |
| | Lloyds Park தியேட்டர், Walthamstow | போகிற வழிக்கு ஒன்று, சம்பந்தம், |
| 27.08.94 | நாடகவிழா | மன்னிக்கவும், சம்பந்தம் |
| | Brocton High School, Toronto, Canada. | பசி, மழை |
| 11.03.95 | நாடகவிழா | யுகதர்மம், கானசாகரம், மழை,சம்பந்தம் |
| | Musse National Des Arts Asratiauss, Paris France | |
| 12.03.95 | நாடகவிழா, Musse National | பாரததர்மம், போகிற வழிக்கு ஒன்று |
| | Des Arts Asratiauss, Paris France. | மன்னிக்கவும், முகமில்லாத மனிதர்கள் |
| 16.04.95 | நாடகவிழா | மழை, பசி |
| | Sentrum Kino, Oslo, Norway | மன்னிக்கவும், சம்பந்தர், பாரததர்மம் |
| 17.04.95 | Ortun Skole | மழை, மன்னிக்கவும் |
| | Bergan - Norway. | பாரததர்மம் |
| 03.09.95 | Froyal Centre | கருஞ்சுழி ஆறுமுகம் அவர்களுடன் |
| | Manor Park | கலந்துரையாடலும், நிகழ்த்திக்காட்டலும் |
| 04.02.96 | Willaiam Morris | பேராசிரியர் சிவத்தம்பி |
| | Community Centre, Walthamstow | அவர்களுடன் கலந்துரையாடல் |
| 20.04.96 | பிறெண்ற் தமிழ்ச்சங்கம், கலைவிழா | மலைகளை அகற்றிய மூடக்கிழவன் |
| | Hall Wembley, Brent Town | |
| 26.04.96 | நாடகவிழா | மழை, மன்னிக்கவும் |
| | Ryde Civic Hall, Sydney, Australia. | சம்பந்தம், பாரததர்மம், துன்பக்கேணியிலே |

| | | |
|---|---|---|
| 27.04.96 | நாடகவிழா<br>Brisbane, Australia. | மழை, துன்பக்கேணியிலே<br>மன்னிக்கவும், சம்பந்தம், பாரததர்மம் |
| 28.04.96 | நாடகவிழா<br>St. Marys Community Hall, Melbourne, Australia. | மழை, பாரததர்மம், சம்பந்தம், இரு துயரங்கள்<br>பிரத்தியேகக்காட்சி |
| 04.05.96 | மெல்பன் கலைவட்டம்<br>Clartndo Community Hall, Melbourne, Australia. | பசி |
| 17.08.96 | நோர்வே தமிழ்ச்சங்கம்<br>Sampunn Huset, Oslo - Norway. | துன்பக்கேணியிலே<br>இடைவெளி |
| 08.09.96 | நாடகவிழா<br>Secombe தியேட்டர்<br>Sutton | இடைவெளி, முகமில்லாத மனிதர்கள்<br>மலைகளை அகற்றிய மூடக்கிழவன்<br>துன்பக்கேணியிலே |
| 28.09.96 | நாடகவிழாவும் கருத்தரங்கும்<br>Waltham Forest தியேட்டர்<br>Lloyd Park, Walthamsow | இடைவெளி<br>ஆற்றைக்கடத்தல், முகமில்லாத மனிதர்கள்<br>மலைகளை அகற்றிய மூடக்கிழவன் |
| 18.01.97 | லிம்பேர்க் தமிழ்மன்றம்<br>Oss Kooer, Sittard, Holland. | பிரத்தியேகக்காட்சி<br>ஆற்றைக்கடத்தல் |
| 01.02.97 | நாடகவிழா<br>Paul Robeson Theatre, Hounslow. | மழை, மலைகளை அகற்றிய மூடக்கிழவன்<br>முகமில்லாத மனிதர்கள், பிரத்தியேகக் காட்சி |
| 16.04.97 | Brunel பல்கலைக்கழக தமிழ்ச் சங்கம்,<br>Uxbridge. | எப்போ வருவாரோ |
| 24.05.97 | அரங்காடல்<br>Birchmount Park CT, Toronto, Canada | முகமில்லாத மனிதர்கள், மன்னிக்கவும்<br>துன்பக்கேணியிலே, ஆற்றைக்கடத்தல் |
| 28.09.97 | பிறென்ற் தமிழ்ச்சங்கம்<br>கலைவிழா - Acton நகர மண்டபம் | அயலார் தீர்ப்பு |
| 08.11.97 | நாடகவிழா<br>Winston Churchill Hall, Ruislip. | மலைகளை அகற்றிய மூடக்கிழவன், அயலார் தீர்ப்பு<br>எப்போ வருவாரோ, ஆற்றைக் கடத்தல்,<br>அவசரக்காரர்கள் |
| 15.11.97 | நாடகவிழா<br>Waltham Forestதியேட்டர்<br>Lloyds Park, Walthamstow. | அயலார் தீர்ப்பு<br>மலைகளை அகற்றிய மூடக்கிழவன், அவசரக்காரர்கள்<br>எப்போ வருவாரோ, ஆற்றைக்கடத்தல் |
| 30.11.97 | சர்வதேச தமிழ் மாணவமன்றம்<br>'கல்லூரிப்பூக்கள்', Ealiong Town Hall | மெய்ச்சுடரே, கவிதா நாடக நிகழ்வு |
| 03.01.98 | Northerns Sports Club<br>புதுவருட விழா, Greenford நகர மண்டபம் | அயலார் தீர்ப்பு, நர்த்தனக்கோலம்,<br>கானசாகரம் |
| 21.11.98 | நாடக விழா<br>The Bhavan Centre,Kensington | அயலார் தீர்ப்பு, எப்போ வருவாரோ<br>பெயர்வு, மழை |
| 05.12.98 | சர்வதேச தமிழ் மாணவர் மன்றம்<br>'கல்லூரிப்பூக்கள்' Acton Town Hall | பெயர்வு, |
| 12.12.98 | நாடகவிழா<br>Merton Hall, Wimbledon | ஒரு பயணத்தின் கதை, எப்போ வருவாரோ, பெயர்வு,<br>பிரத்தியேகக்காட்சி, போகிற வழிக்கு ஒன்று |
| 17.03.99 | சுவிஸ் தமிழ் மாணவர் ஒன்றியம்<br>Bern, Switzerland. | நாடகப்பட்டறை |
| 24.04.99 | பிறென்ற் தமிழ்ச்சங்கம்<br>புதுவருட விழா, Brent Town Hall, Wembley | பரமார்த்த குருவும் சீடர்களும் |
| 01.05.99 | சிறுவர் நாடகவிழா<br>Greenford Hall | அயலார் தீர்ப்பு, ஒரு பயணத்தின் கதை<br>பரமார்த்த குருவும் சீடர்களும் |

| | | |
|---|---|---|
| 08.05.99 | Acton Town Hall | ஒரு பயணத்தின் கதை |
| | தமிழ் அநாதைகள் அறக்கட்டளை விழா | |
| 22.05.99 | Walthamstow Asscmbley Hall | பரமார்த்த குருவும் சீடர்களும் |
| | யாழ். இந்து கலைவிழா 'கலையரசி' | |
| 28.08.99 | Oslo, Norway. | பெயர்வு, கண்ணாடி வார்ப்புகள் |
| 18.09.99 | நாடகவிழா | கண்ணாடி வார்ப்புகள், பெயர்வு |
| | Secombe தியேட்டர், Sutton | பரமார்த்த குருவும் சீடர்களும் |
| 06.11.99 | நாடகவிழா | சம்பந்தம் |
| | Winston Churchill Hall, Ruislip | பிரத்தியேகக்காட்சி, மழை |
| 21.11.99 | The Bhavan Centre, Kensington | கண்ணாடி வார்ப்புகள் |
| 15.04.2000 | பிறென்ற் தமிழ்ச்சங்கம் | வேடரை உச்சிய வெள்ளைப் புறாக்கள் |
| | புதுவருடவிழா, Brent Town Hall | |
| 05.08.2000 | பூபாள ராகங்கள் | வேடரை உச்சிய வெள்ளைப் புறாக்கள் |
| | யாழ். கம்பர்மலை அரசினர் பாடசாலை, Winston Churchill Hall, Ruislip | |
| 28.08.2000 | தமிழ்ப்பாடசாலைகள் விளையாட்டுச் சங்கம் | சிறுவர் நாடகப் பட்டறை |
| | Warren Farm Sports Centre | |
| 21.10.2000 | Winstn Churchill Collegeate | கண்ணாடி வார்ப்புகள் |
| | Auditorium, Scarborough, Canada. | பெயர்வு, யுகதர்மம் |
| 28.10.2000 | Scarborough, Canada. | சம்பந்தம் |
| 04.11.2000 | Thamil House | ஈழத்து நவீன ஓவியம் |
| | Manor Park | கலைஞர் அ. மாற்குவின் நினைவு நிகழ்வு |
| 24.02.2000 | நாடகவிழா | கண்ணாடி வார்ப்புகள் |
| | Paul Robeson Theatre | பார்வைக் கோளாறு |
| | Hounslow | வேடரை உச்சிய வெள்ளைப்புறாக்கள் |
| 21.04.2001 | பிறென்ற் தமிச்சங்கம் | ஒரு பயணத்தின் கதை |
| | புதுவருடவிழா, Copland Community School, Wembley | |
| 05.05.2001 | தமிழர் மருத்துவ நிறுவனம் | கண்ணாடி வார்ப்புகள் |
| | Kelsey Park School Hall, Kelsey | |
| 22.07.2001 | பூபாளராகங்கள் | மழை |
| | Beck தியேட்டர், Hayes | |
| 13.10.2001 | நாடகவிழா | காத்திருப்பு, மழை |
| | Secombe Theatre, Sutton | வேடரை உச்சிய வெள்ளைப்புறாக்கள் |
| 06.04.2002 | சிவயோகம் முத்தமிழ் விழா | காத்திருப்பு |
| | சிவயோக கலை அரங்கம், | |
| | Tooting | |
| 05.05.2002 | நாடகவிழா | கண்ணாடி வார்ப்புகள் |
| | London சிவன் நிலையம், Lewisham | பிரத்தியேகக்காட்சி |
| 13.07.2002 | 'பொங்கும் பொழுது' | பிரத்தியேகக்காட்சி |
| | மானிப்பாய் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் | |
| | Sir James Hawkey Jall, Woodfordgreen. | |
| 13.08.2002 | பூபாளராகங்கள் | வேருக்குள் பெய்யும் மழை |
| | Beck Theatre, Hayes | காத்திருப்பு |

We Care and it Shows

TILKO
ESTATES

## Sales, Financial Services & Lettings

**TENANTS:**

கிழக்கு லண்டனில் எப்பகுதியிலும்
Rooms / Flat / Houses வாடகைக்கு எடுத்து தரப்படும்

Landlords:
Call us for further details about our rent guarantee scheme

213 High Street North
**EAST HAM E6**
Tel: 020 8472 0029
Fax: 020 8503 5996

14 High Street
**WANSTEAD**
Tel: 020 8989 0002
Fax: 020 8989 0003

252 Hoe Street
**WALTHAMSTOW E17**
Tel: 020 8520 9968
Fax: 020 8503 7661

1 Leytonstone Road
**STRATFORD E15**
Tel: 020 8503 1999
Fax: 020 8503 0999

# Station Superstore

**Off Licence & Grocers**
**Worldwide Money Transfers, Off Licence & Groceries**

5-6 Station Parade, High Street North,
East Ham, London E6 1JD
**Tel: 020 8503 4711 Fax: 020 8548 9564**

**உலக மக்களின் கவனம் தமிழினத்தின் பக்கம்**
**இலண்டன்மக்களின் கவனம்**
**Station Superstoreஇன் பக்கம்**


---

தீபம் தொலைக்காட்சி,
சன்றைஸ் வானொலி,
Tamil Times, புதினம்,
அஞ்சல், அருவி, CITV தொலைக்காட்சி,
வீரகேசரி, தினக்குரல், சுடரொளி பத்திரிகைகள்,
IBC வானொலிக்கும்,
விளம்பரத்திற்கு உதவிய ஈஸ்ட்ஹாம், லக்சுமி ஜுவலர்ஸ்,
போக்குவரத்திற்கு உதவிய மனோர்பாக், வெல்கம் சென்ரர்,
ஒத்திகைக்கு மண்டபம் தந்துதவிய ஹரோ தொழில்கட்சி,
மற்றும் எமது விளம்பரதாரர்களுக்கும், Print Tone அச்சகத்தினருக்கும்

மற்றும் எமது நாடகவிழா சாத்தியமாவதற்கு உதவிய அனைத்து ஆதரவு சக்திகளுக்கும்

## எமது இதயபூர்வமான நன்றிகள்

- தமிழ் அவைக்காற்று கலைக்கழகம்

# NARTHANA KALALAYA

## Dance & Music Classes

Offers classes,
Performances Featuring
Bharatha Natyam and Music

**ARTISTES**
Bharatha Natyam & Carnatic Vocalist
**Smt. Pathmini Gunaseelan**
4 Lorne Road, London E17
Tel: 020 8509 1263 Fax: 020 8925 0956
Email: narthanakalalaya@hotmail.com

# London Catering Equipment Supplies

Are you opening a new shop or thinking of refurbishing your existing premises?
Are you planning to buy fried chicken equipments - Henny Penny pressure Frier, HCW5 Display cabinet or chips frier?
Are you planning to repair or reconditioning your fried chicken equipment?

**Then LECS is the answers to your needs!**

Please contact - Seelan
**Tel: 020 8509 1263**
**Fax: 020 8925 0956**
**Mobile: 07957 190 628**

4 Lorne Road, Walthamstow, London E17 7PX
Warehouse: Unit 5, 81-83, Lennox Road, Walthamstow, London E17 8NT

'A1 Can't be A2'

இலண்டனில் முதல் தமிழ் மொத்த வியாபார நிறுவனம்

# LCC

M.D, Larich, Rabeena, TRS, Niru, Natco உட்பட
சகலவிதமான தமிழீழ, இலங்கை, இந்திய, மேலைத்தேய
உணவுப்பொருட்களையும்,

சிகரெற்

மதுபான வகைகளையும்

மொத்தமாகப் பெற்றுக்கொள்ள

# LONDON CASH AND CARRY LTD

**Unit B2, Eastern Approach,**
**25 Alfreds way (A13), Barking,**
**Essex IG11 0TJ**
**Tel : 020 8709 1820 Fax : 020 8709 1830**
**email : info@londoncashandcarry.co.uk**

**(Traders Only)**




PRINT TONE: AMALAN 020 8520 3702